# ராணுவத்தினர் 'பைகளைச்' சுத்தமாக்கினர் - புலிகள்

# இல்லை, 'தெருவையே' சுத்தமாக்கினர் - அரசு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா அரசபடையினர் பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் அவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது பற்றி மேலும் தெரியவருவதாவது, அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களிலும் வீதிச் சோதனைகளை நடாத்தி தமிழ் மக்களின் சட்டைப் பைகளில் இருந்த பணத்தையும் பறித்தெடுத்துக் கொண்டு, லொறியொன்றில் வந்த சிறிலங்காப் படையினர் மீது பகிபெல்ல என்னுமிடத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் பத்துப் படையினர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயங்களுடன் ஓடித் தப்பினர். இவர்களில் ஒருவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

Regisiered as a News Paper in Sri Lanka; பக்கங்கள் 04

விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (29 - 12 - 1990) சனிக்கிழமை ஓசை 304

## பத்திரிகைகளால் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகைச் செய்திகளினால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நம்பிக்கையை பொதுமக்கள் இழக்கின்றனர். இவ்வாறு நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் தொடர்பான கூட்டத்தில்கலந்து கொண்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின்பிரதிநிதிகள்பலர்செயலக உயர் அதிகாரிகளின் கவனத்திற்குமேற்படி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மலரும் புத்தாண்டுடன்

# காலவரையற்றபோர் நிறுத்தம்; விடுதலைப் புலிகள் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 31ஆம் திகதி நள்ளிரவிலிருந்து காலவரையற்ற போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது. பிறக்கும் புத்தாண்டிலிருந்து சிங்கள ஆயுதப் படைகளுக்கு எதிரான சகல போர் நடவடிக்கைகளும் நிறுத்தப்படும் என விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜநிலையையும் உருவாக்கும் ஓர் நல்லெண்ண நோக்கத்துடன் ஒருதலைப் பட்சமான முறையில் காலவரையற்றபோர்நிறுத்தத்தை நாம்பிரகடனம் செய்கிறோம்.

ஆனால், அதேவேளை எமது சமாதான முயற்சியை நிராகரித்து சிறிலங்கா அரசு போர் நடவடிக்கைகளைத் தொடருமாயின் எமதுதேசிய விடுதலை இராணுவம் எதிர்த் தாக்குதலை நடத்தத் தயங்கமாட்டாது. தமிழீழ மக்களுக்கு எதிராக யுத்தத்தைத்தொடர்வதா அல்லது சமாதானத்தை கடைப்பிடிப்பதா என்ற தீர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போரின் வெற்றியைப் பொறுத்தே வடக்கு-கிழக்கு மாகாண அமைதி - ரஞ்சன்

(கொழும்பு)

வடக்குக், கிழக்கு மாகாணத்தில் அடுத்த ஆண்டில் அமைதி ஏற்படுவது என்பது சிறிலங்கா இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திக் கொண்டிருக்கும் போரின் வெற்றியைப் பொறுத்தே இருக்கிறது என

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் குண்டு வீச்சு ஒருவர் பலி; 6பேர் காயம்

(வல்வெட்டித்துறை)

வடமராட்சியின் பல பாகங்களிலும் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை ஆறு நாற்பத்தைந்து முதல் மூன்று மணித்தியாலங்கள் நீடித்த இந்த விமானத் தாக்குதலில் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, சக்கோட்டை, பொலிகண்டி, தொண்டமானாறு பகுதிகளே பலத்த பாதிப்புக்கு இலக்காகின.

இந்தத்தாக்குதலில் ஆ: வடிவேலு என்பவர் கொல்லப்பட்டதுடன், எஸ். சந்திரசே

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்டத்தில் தாக்குதல்

(வவுனியா)

பூந்தோட்டம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சம்பவத்தில் இராணுவத்தரப்பில் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. சம்பவதினம் பூந்தோட்டம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேத ஊர்வலத்தின் மீது ஆவரங்காலில் ஹெலி தாக்குதல்

(செ. த: மை)

மயானம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பிரேத ஊர்வலம்மீது, ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போது பிரேதத்துடன் பாடையை நிலத்தில் வைத்துவிட்டு ஊர்வலத்தினர் பாதுகாப்புத்தேடி ஓடத் தொடங்கினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நூறு பொலிஸார் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா பொலிஸ் பிரிவில் கடமை புரிந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் தற்போது ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பழுகாமம் சுற்றிவளைப்பு வீடுகள் குண்டுவைத்து தகர்ப்பு

திருப்பழுகாமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் வீடுகளைக் குண்டு வைத்து தகர்த்துள்ளனர். கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது திருப்பழுகாமத்தில் சோமசூரியன், கையிலாயபிள்ளை, சிறி, அழ

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்படை கைது செய்த

## இருபத்தொரு தமிழர்கள் பொலிஸில் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கைது செய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் இராணுவமும், ரெலோவும் அடாவடித்தனம்

## பத்து தமிழ்ப் பெண்கள் மானபங்கம் நான்கு வயோதிபர் சுட்டுக்கொலை

### அகதிகள் உணவு இராணுவத்தால் சூறை

சிறிலங்கா அரசு புலிகளை ஒழித்துக் கட்டுவதாக கூறிக் கொண்டு கடந்த ஒரு வார காலமாக பாரிய இராணுவ நடவடிக்கைகளை அப்பாவிப் பொது மக்கள்மீது மிலேச்சத்தனமாக அவிழ்த்து விட்டிருக்கிறது: இந்த இராணுவ நடவடிக்கைகளால் பத்துக்கும் அதிகமான பெண்கள் பாலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 5000 ஆங்கில ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டில் 5000 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற இருப்பதாலும், முன்னர் அறிவித்ததன் தொடர்பாகவும் இந்த 5000 பேர் புதிதாக நியமிக்கப்படுவர் என அறிவித்துள்ளது.

## வீரவணக்கம்

### 'பாலா'

(யாழ்ப்பாணம்)

வீமன்காமத்தில் உள்ள இராணுவ முகாமில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் பாலா (இராசையா தவநேசன், அச்சுவேலி தெற்கு, நாவற்காடு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில் மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் (50 வருட கால நம்பிக்கைச் சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

(B-1648)

---

### திருமணக்கு

மணமக்கள் அலங்கார வாகனம் வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மணிடேனா ரேடர்" இல. 856A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரங்குவுலகம்" 148 நவீன சந்தை யாழ்ப்பாணம்.

(B-888)

---

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன்உறை, பித்தளை செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம்.

(B - 1761)

---

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புது வருட பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(B. 1658)

---

### The Jaffna Education Centre

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O,L, A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு.

(B. 1657)

---

### தவறி விட்டது

பண்டத்தரிப்பிலிருந்து நல்லாருக்கு வரும் வழியில்

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்

Day Classes

A/L 90, 91

ஆரம்பம்: 02 - 01 - 1991

புதன்கிழமை காலை 8-15மணி

### பொருளியல் - வரதராஜன்

"இலங்கைப் பொருளாதாரம்"

ஆரம்பம்: 02. 01. 1991

புதன்கிழமை காலை 9-15 மணி

(B/1773)


## காணவில்லை



### திரு.கணபதிப்பிள்ளை நல்லையா

புங்குடுதீவு மாவுதிடலை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நல்லையா என்பவர் கொழும்பிலிருந்து ஊர் திரும்பியவர், ஆறுமாதமாகியும் இன்னும் வீடுவந்து சேரவில்லை. இவரது தகவல் எதனையும் அறியமுடியாத நிலையில் உள்ளோம். தகவல் தெரிந்தால் பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

புங்குடுதீவு - 8 திருமதி இ. நல்லையா

(R/977)

---

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



---

# வார்ட்டிற்குச் செல்லும் வழி சீரின்மையால் நோயாளர் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பகுதியிலிருந்து 24ஆம் வார்ட்டுக்குப் போகும் பாதையில் பள்ளம் திட்டிகள் காணப்படுகின்றன. இதனால் சக்கர நாற்காலியில் மேற்படி வார்ட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் நோயாளிகள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

24 ஆம் வார்ட் காயப்பட்டவர்களை அனுமதிக்கும் வார்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

(85)

# அறுபது வயதாகியும் சேவை புரியும் அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

உயரதிகாரிகளாக இருந்த போதிலும் தொல்லை தீர்ந்தது என எண்ணி தமது உத்தியோகங்களை விட்டெறிந்து ஓய்வூதியம் தேடும் ஒருசாரார் இருக்கும் அதேவேளை அறுபது வயதாகியும் சளைக்காது யாழ். செயலகத்தில் சேவையாற்றும் அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அறுபது வயதாகிவிட்ட இந்த அதிகாரிகள் அரச ஆவணங்களில் கையெழுத்திட்டு வருகின்றனர். ஆனால் இவர்களது வயது அதிகரிப்பின் காரணமாகச் சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதத்திலிருந்து இவர்களது சம்பளம் வழங்கப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(லோ)

---


## சமையற்காரர்கள் தேவை

அசைவ, சைவ உணவுவகைகள் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. தகைமை வாய்ந்தோர் 5-1-91 அன்று காலை 10.00மணி தொடக்கம் 4 00 மணிவரை நல்லூர் இந்து விடுதிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— நிர்வாகம்.

(B-1780)

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் சூ பலஸ், 51, கஸ்தூரியார் வீதியிலிருந்து தற்காலிகமாக திருநெல்வேலி சென்றல் நேர்ஸிங் ஹோம் சந்திக்கு முன் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துடன் எமதுவாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம். எம்மிடம் சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்

யாழ்ப்பாண சூ பலஸ்

(B-1781)


---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



(B-888)

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழிச்தீன்உறை, பித்தளை செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (B - 1761)

---

**லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்**

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புது வருட பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B. 1658)

---

**The Jaffna Education Centre**
**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. (B. 1657)

---

**தவறி விட்டது**

பண்டத்தரிப்பிலிருந்து நல்லூருக்கு வரும் வழியில் 'BOSECO' வில் புத்தகமும் சிதற்குள் காசோலைகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர் கோவில் முன்பாகவுள்ள "முருகன் ஸ்ரோரில்" ஒப்படைத்தால் மிக நன்றியுடன் சன்மானமும் வழங்குவோம். 'போஸ்கோ' இன்டஸ்றீஸ் நல்லூர். (R/982)

---

**கண்டெடுக்கப் பட்டுள்ளது**

(நமது நிருபர்)

கொக்குவில் கோவில் வீதியில் திறப்புக்கோர்வை ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. அடையாளம் காட்டி ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**"ஒளிவிழா"**

(யாழ்ப்பாணம்)

ஒளிவிழாவும், 'மரியாளின் மகத்துவம்' நூல் வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் இடம்பெறும்.

துரை ஆரோக்கியநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் நத்தார் செய்தி வழங்குவார்.

---



## திரு. கணபதிப்பிள்ளை நல்லையா

புங்குடுதீவு மாவுதிடலை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நல்லையா என்பவர் கொழும்பிலிருந்து ஊர் திரும்பியவர், ஆறுமாதமாகியும் இன்னும் வீடுவந்து சேரவில்லை. இவரது தகவல் எதனையும் அறியமுடியாத நிலையில் உள்ளோம். தகவல் தெரிந்தால் பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

புங்குடுதீவு - 8 — திருமதி இ. நல்லையா

(R/977)

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 3 - 1 - 1973



விண்ணகம் 19 - 11 - 1990

### செல்வி
### சின்னத்தம்பி சுபாஜினி (சிவா)

சிவனென்று நாம் அழைக்க
சிரித்தபடி வந்து நிற்பாய்
பிரியமுடன் இருந்தோமே
பிரிந்துன்னைத் தவிக்கின்றோம்
ஏழு பேருடன் கூடி நீ பிறந்து
எட்டித் தனிவழியே சென்றுவிட்டாய்
உன்னைப் படைத்த கடவுள்
பாலன் என்றும் பாராமல்
பாதி வழியில் பறித்தானோ!

உன் பிரிவினை எங்களால் தாங்க முடியவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
உன்பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், அண்ணிமார்,
மருமக்கள்.

கா. சின்னத்தம்பி
நுணாவில் மேற்கு
சாவகச்சேரி.

(R/949)

---

பதில் அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. தகைமை வாய்ந்தோர் 5 - 1 - 91 அன்று காலை 10.00மணி தொடக்கம் 4 00 மணிவரை நல்லூர் இந்து விடுதிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— நிர்வாகம்.

(B-1780)

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் சூ பலஸ், 51, கஸ்தூரியார் வீதியிலிருந்து தற்காலிகமாக திருநெல்வேலி சென்றல் நேர்ஸிங் ஹோம் சந்திக்கு முன் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது.


கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துடன் எமதுவாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம். எம்மிடம் சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்
யாழ்ப்பாண சூ பலஸ்

(B-1781)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கிறிஸ்ரி
### (சீ. பேச்சிமுத்து)

| அடிமை மண்ணில் | அடிமை விலங்கொடிப்பில் |
|---|---|
| பிறப்பு: | இறப்பு: |
| 05-05-1959 | 29-12-1986 |

29. 12. 1986 இல் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தை எதிர்த்து நின்று போராடி வீரமரணத்தை தழுவிக் கொண்ட எம் மாவீரனே! உமக்கு எம் இதய அஞ்சலி, என்றும் உமது பணி தொடர்வோம்!

20, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. — சகோதரி மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

(B/1779)

## சிந்தனைக்கு

நாம் நீண்டகாலம் அழுது புலம்பி விட்டோம்;
இனிமேல் அழுகைக்கு இடமில்லை.
உங்கள் பலத்தைக் கொண்டே
எழுந்து நில்லுங்கள்; வாழுங்கள்;

-- சுவாமி விவேகானந்தர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 29-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்.05


# பொருளாதாரத் தடையும் உடைத்தெறியப்படட்டும்

சிறிலங்கா அரசாங்கம் தனது இறுதிக் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இராணுவ வெற்றிகள் கை நழுவிச் செல்ல பொருளாதாரத் தடையினையும், உணவு விநியோகத்தடையும் தடை செய்து மக்களையும், போராளிகளையும் பணிய வைக்கப் பார்க்கிறது. இதன் பிரதிபலிப்பே கப்பல்கள் வராமையும், லொறிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் - அவற்றில் சென்ற லொறிச் சாரதிகள், உதவியாளர்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்படுவதும் ஆகும்;

மனுபூர்வமாக நோக்கும்போது எமது சுதந்திரத்திற்காக ஒரு தனி அரசை அமைப்பதற்காகப் பெரும், நீண்ட போரொன்றை சிறிலங்கா அரசுடன் நடத்தும், தமிழர்கள் அவர்களிடம் இருந்து உணவு வரும் என எதிர்பார்த்துக் கொண்டும், அவர்களின் உணவிற்காக ஏங்கிக்கொண்டும் இருப்பதும் தவறாகும்.

ஒரு யுத்தத்தின்போது முன்னைய சமூக ஒழுங்குகள் எவ்வாறு மாற்றமடைகின்றனவோ அதேபோன்று, அந்தச் சமூகத்தின் பொருளாதார ஒழுங்குகளும், விநியோக ஒழுங்குகளும் அதற்கேற்றவாறு மாறும். அதனால் மக்களுக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுவதுண்டு. இதனால் மக்கள் பெரும் இன்னல்களைச் சந்திப்பதுண்டு. இதனால் போராட்டங்களை நிறுத்திவிடவோ ஸ்தம்பிதமடையச் செய்வதோ முடியாததாகும்.

தமிழீழப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியபோது அதில் ஒரு சில இளைஞர்கள்தான் இணைந்துகொண்டார்கள். அப்பொழுது ஒரு சிறு கெரில்லாக் குழுவாக இருந்த தமிழீழவிடுதலைப்புலிகளின் தாக்கிவிட்டு தப்பிச்செல்லும் கெரில்லாப் போர்முறையானது பலராலும் விமர்சிக்கப்பட்டது. ஒரு அரச இராணுவத்துடன் இவ்வாறான ஒரு சிறுகுழுவால் வெற்றி கொள்ள முடியுமா? தொடர்ந்து போரை நடத்த முடியுமா? என்று மேலும் ஒரு நாட்டின் உதவியின்றி, அங்கீகாரமின்றி போராட்டத்தை நடத்த முடியுமா? ஆயுதங்கள் பெற முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்பட்டு பல்வேறு ரீதியில் விமர்சனங்கள் செய்யப்பட்டதும் உண்டு ஆனால் இன்று இவை யாவற்றையும் மீறி விடுதலைப் புலிகளின் வளர்ச்சி இந்த மண்ணில் இருந்து இராணுவத்தை விரட்ட முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுத்துள்ளது;

இந்த நிலையை விடுதலைப்புலிகள் சும்மா பெற்றுவிடவில்லை. பல இழப்புக்களைச் சந்தித்து, பல சோதனைகளின் மத்தியில் மன உறுதியுடனும், திறத்துடனும் போராடியே இந்த நிலையை அடைந்தனர். இன்று எவரின் உதவியுமின்றி சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒரு நீண்ட போரை நடத்தும் ...

இராணுவ ரீதியில் மட்டுமல்ல;

# பொருளாதார ரீதியிலும் வெற்றிக்கு இணைந்து போராட வேண்டும்

-ராஜன்

(யாழ்ப்பாணம்)

'சிறிலங்கா இனவெறி அரசை இராணுவ ரீதியில் மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும்நாம்வெற்றிகொள்ளவேண்டும்.இதற்குஅனைத்து தமிழீழ மக்களும் இணைந்து போராட வேண்டும்' இவ்வாறு திருநெல்வேலியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற லெப்டினன்ட் சங்கீதர நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பொருளாதாரத் தடையை மூடி மறைப்பதற்காகக் கப்பலில் உணவு அனுப்புவதாகக்கூறி உலகை ஏமாற்றிக்கொண்டிருக்கும் அதே வேளை தமிழ் இனத்தைப் பட்டினி போட்டுக் கொலை செய்யலாம் என சிறிலங்கா அரசு கனவு காணுகின்றது: இதன்மூலம் விடுதலைப் போராட்டத்தில் இருந்து மக்களைத் திசை திருப்ப முனைகிறது. எனவே சகல மக்களும் அரசின் பொருளாதாரத் தடையைஎதிர்த்துப்போராட வேண்டும் என்று கூறினார்;

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு.மோகன் தூபியைத் திறந்துவைத்ததை தொடர்ந்து மேற்படி நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

லெப். சங்கீதாவின் உருவப் படத்தை அவரது தாயார் திரைநீக்கம்செய்துவைத்தார். இவ்வைபவத்தில் மறைந்த போராளிகளான திருவாளர்கள் செல்லக்கிளி, திலீபன், புலேந்திரன், கரும்புலி மில்லர், குமரப்பா, சுரேஷ், அலெக்ஸ், பாபு ஆகியோரின் உருவப் படங்களும் அப்போராளிகளின் உறவினர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி, மகளிர் முன்னணி அரசியல் பொறுப்பாளர் செல்வி நிசாந்தி, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. அரவிந்தன் ஆகியோரும்உரை நிகழ்த்தினர். (சு)

# 6 மாத ராணுவ நடவடிக்கையால் பொருளாதாரம் அழிந்துவிட்டது

### யாழ். பிரஜைகள் குழு பிரேமதாசாவிற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தம் ஆரம்பித்து ஆறுமாத காலமாகி விட்டது. தனது பிரஜைகளின் மேல் குண்டு வீசுவதும், ஆர்ட்டிலறி ஷெல்,பீரங்கிப்படகுத் தாக்குதல் ஆகியன மேற்கொள்ளுதல் சிறிலங்காவைப் போல் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லை; இதனால் வடக்கிலும், கிழக்கிலும் பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மாங்குள யுத்தத்தின் பிறகு பொதுமக்கள் குடியிருப்புகள் மீது வான்தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வவுனியா திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களில் அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுவதோடு கொலை செய்யப்படுகிறார்கள். அகதி முகாம்களில் இருப்பவர்களை பிடித்துச் சென்று கொலை செய்கிறார்கள் என்றும், வவுனியாவில் வைத்துப் பிரயாணிகள் கொலை செய்யப்படுவதோடு, பொருள்களை ஏற்றி வந்த வாகனங்களை மதிக்க சாரதியையும், கிளினரையும் கைதுசெய்ததோடு அவர்கள் என்னவானார்கள் என்பது பற்றித் தெரியாது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# யாழ். மாநகர சபைக்கு நிதி நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

மாதாந்தம்ரூ 22லட்சத்திற்கும் அதிகமான வருமானம் பெறும் யாழ். மாநகரசபை தற்போது எந்தவித வருமானமும் அற்ற நிலையில் நிதி வசதியின்றி இருக்கிறது என யாழ். மாநகர சபை பிரதம கணக்காளர் தகவல் தெரிவித்தார்.

மாநகர சபையின் இந்த நஷ்ட நிலை குறித்து அவர் விளக்கம் தருகையில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ். நகரம் சீரழிந்து போய்விட்டமையாலும், மின்சாரம் தடைப்பட்டு விட்டமையாலும் எமக்கு மின்சார வரியோ அன்றி வருமான வரியோ பெற்றுக்கொள்ள முடியாது போனமையே இந்த வருமான வீழ்ச்சியின் காரணமாகும் என்றார். (லோ)

# பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் படிப்புக் கல்வி, டிப்புளோமாப் பரீட்சைகளில் சித்தியடைந்தமாணவர்களின் பெறுபேறுகள் யாழ். பல்கலைக்கழகத்தால் வெளியிடப் ... நாதன் விசேட சித்தியும், திருமதி பி. பசுபதி, செல்வி கே. விநாயகமூர்த்தி ஆகிய இருவரும் திறமைச் சித்தியுமடைந்துள்ளனர். பகுதிநேர வகுப்புக்களில் திருமதி பி. ஜெய ...

# முல்லையிலும் மோதல்,

லொறிச் சாரதிகள், உதவியாளர்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்படுவதும் ஆகும்.

மனுபூர்வமாக நோக்கும்போது எமது சுதந்திரத்திற்காக ஒரு தனி அரசை அமைப்பதற்காகப் பெரும், நீண்ட போரொன்றை சிறிலங்கா அரசுடன் நடத்தும், தமிழர்கள் அவர்களிடம் இருந்து உணவு வரும் என எதிர்பார்த்துக் கொண்டும், அவர்களின் உணவிற்காக ஏங்கிக்கொண்டும் இருப்பதும் தவறாகும்.

ஒரு யுத்தத்தின்போது முன்னைய சமூக ஒழுங்குகள் எவ்வாறு மாற்றமடைகின்றனவோ அதேபோன்று, அந்தச் சமூகத்தின் பொருளாதார ஒழுங்குகளும், விநியோக ஒழுங்குகளும் அதற்கேற்றவாறு மாறும். அதனால் மக்களுக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுவதுண்டு. இதனால் மக்கள் பெரும் இன்னல்களைச் சந்திப்பதுண்டு. இதனால் போராட்டங்களை நிறுத்திவிடுவதோ ஸ்தம்பிதமடையச் செய்வதோ முடியாததாகும்.

தமிழீழப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியபோது அதில் ஒரு சில இளைஞர்கள்தான் இணைந்துகொண்டார்கள். அப்பொழுது ஒரு சிறு கெரிலாக் குழுவாக இருந்த தமிழீழவிடுதலைப்புலிகளின் தாக்கிவிட்டு தப்பிச்செல்லும் கெரிலாப் போர்முறையானது பலராலும் விமர்சிக்கப்பட்டது. ஒரு அரச இராணுவத்துடன் இவ்வாறான ஒரு சிறுகுழுவால் வெற்றி கொள்ள முடியுமா? தொடர்ந்து போரை நடத்த முடியுமா? என்று மேலும் ஒரு நாட்டின் உதவியின்றி, அங்கீகாரமின்றி போராட்டத்தை நடத்த முடியுமா? ஆயுதங்கள் பெற முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்பட்டு பல்வேறு ரீதியில் விமர்சனங்கள் செய்யப் பட்டதும் உண்டு ஆனால் இன்று இவை யாவற்றையும் மீறி விடுதலைப் புலிகளின் வளர்ச்சி இந்த மண்ணில் இருந்து இராணுவத்தை விரட்ட முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுத்துள்ளது.

இந்த நிலையை விடுதலைப்புலிகள் சும்மா பெற்றுவிட வில்லை. பல இழப்புகளைச் சந்தித்து, பல சோதனைகளின் மத்தியில் மன உறுதியுடனும், தீரத்துடனும் போராடியே இந்த நிலையை அடைந்தனர். இன்று எவரின் உதவியுமின்றி சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒரு நீண்ட போரை நடத்தும் பலமும், துணிவும் பெற்றுள்ளார்கள்.

இதேபோன்றதொரு போராட்டத்தையே இன்று மக்களும் தம் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைக்கு எதிராகவும், உணவு விநியோகத் தடைக்கு எதிராகவும் மேற்கொள்ள வேண்டும், நமது சகல வளங்களையும் இவற்றிற்காகப் பயன்படுத்த வேண்டும்.

பொருளாதாரத் தடையும், உணவுத் தடையும் உடைத்தெறிய உற்பத்தி உள்ளீடுகள், சக்திப் பொருள்கள் இல்லை. அவற்றின் விலைவாசி உயர்வு, கிடைக்கவில்லை என்ற நிலை வரும்போது அவையும் சிறிலங்கா அரசாங்கத்தின் ஊடாகவே வருபவை. அவற்றிற்கு எதிராக போராடவும் மாற்று வழிகளைக் கண்டறியவும் நாம் போராட வேண்டும் நெருக்கடிகால உற்பத்தியில் எதிர்பார்த்த விளைச்சல்கள் எட்டப்படாமல் போகலாம், சிலவேளைகளில் விளைந்த நிலங்களில் அறுவடை செய்ய முடியாமல் போகலாம். இதனால் உற்பத்தியை மேற்கொள்ளாமல் இருக்க முடியாது.

இலங்கைத்தீவு முழுவதும் ஒருநாடு என்று அரசு கருதுமானால் - அங்குள்ள மக்கள் அனைவரையும் பராமரிக்கும் பொறுப்பு அந்த நாட்டின் அரசிற்கு இருக்குமானால் - தமிழ் மக்களுக்கு உணவு அனுப்பும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு அதேவேளை அதைப் பெற்றுக் கொடுக்கும் கடமைப்பாடு அரசாங்கத்தின் தமிழ்ப் பிரதேச நிர்வாகிகளாக இருப்போரது கடமையாகும். ஆனால், சுதந்திரத்திற்காகப் போராடும் மக்கள் இதை எதிர்பார்த்து இருத்தல் தவறானதாகும்

தமிழ் மக்கள் கடின உழைப்பிற்குப் பேர் போனவர்கள். வறண்ட பூமியைத் தமது கடின உழைப்பால் செல்வம்கொழிக்கும் பூமியாகமாற்றியவர்கள் கடின உழைப்பிற்காக பாராட்டப்பட்டவர்கள். எழுபதுகளின் நடுப்பகுதியில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தை வெற்றியுடன் சமாளித்தவர்கள். ஆகையினால், இந்தப்போராட்டத்திலும் வெற்றி பெறுவார்கள் என உறுதியுடன் நம்பலாம்.

# [illegible]
# பொருளாதாரம் அழிந்துவிட்டது

## யாழ். பிரஜைகள் குழு பிரேமதாசாவிற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தம் ஆரம்பித்து ஆறுமாத காலமாகி விட்டது. தனது பிரஜைகளின் மேல் குண்டு வீசுவதும், ஆர்ட்டிலறி ஷெல், பிரயோகிப்படகுத் தாக்குதல் ஆகியன மேற்கொள்ளுதல் சிறிலங்காவைப் போல் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லை, இதனால் வடக்கிலும், கிழக்கிலும் பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மாங்குள யுத்தத்தின் பிறகு பொதுமக்கள் குடியிருப்புகள் மீது வான்தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வவுனியா திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களில் அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுவதோடு கொலை செய்யப்படுகிறார்கள். அகதி முகாம்களில் இருப்பவர்களை பிடித்துச் சென்று கொலை செய்கிறார்கள் என்றும், வவுனியாவில் வைத்துப் பிரயாணிகள் கொலை செய்யப்படுவதோடு, பொருள்களை ஏற்றி வந்த வாகனங்களை மறித்து சாரதியையும், கிளீனரையும் கைதுசெய்ததோடு அவர்கள் என்னவானார்கள் என்பது பற்றித் தெரியாது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## யாழ். மாநகர சபைக்கு நிதி நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

மாதாந்தம்ரூ 22லட்சத்திற்கும் அதிகமான வருமானம் பெறும் யாழ். மாநகரசபை தற்போது எந்தவித வருமானமும் அற்ற நிலையில் நிதி வசதியின்றி இருக்கிறது என யாழ். மாநகர சபை பிரதம கணக்காளர் தகவல் தெரிவித்தார்.

மாநகர சபையின் இந்த நஷ்ட நிலை குறித்து அவர் விளக்கம் தருகையில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ். நகரம் சீரழிந்து போய்விட்டமையாலும், மின்சாரம் தடைப்பட்டு விட்டமையாலும் எமக்கு மின்சார வரியோ அன்றி வருமான வரியோ பெற்றுக்கொள்ள முடியாது போனமையே இந்த வருமான வீழ்ச்சியின் காரணமாகும் என்றார். (லோ)

## பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் படிப்புக் கல்வி, டிப்புளோமாப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் யாழ். பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளன.

பகுதிநேரவகுப்புக்கள், முழு நேர வகுப்புக்கள், பகுதி நேரம் பகுதி ஒன்று, பகுதி நேரம் பகுதிஇரண்டு எனபிரிவு பிரிவுகளாக வெளியிடப்பட் டுள்ளன.

இதில் முழுநேர வகுப்புக்களில் திருமதி டி. சிதம்பரநாதன் விசேட சித்தியும், திருமதி பி. பசுபதி, செல்வி கே. விநாயகமூர்த்தி ஆகிய இருவரும் திறமைச் சித்தியுமடைந்துள்ளனர். பகுதிநேர வகுப்புக்களில் திருமதி பி. ஜெயராஜா, திரு. கே. சிதம்பரநாதன், திருமதி ரி. விஸ்வநாதன் ஆகியமூவரும் திறமை சித்தி அடைந்துள்ளனர்.

இதேபோல சித்தியடைந்த மாணவர்களின் பெயர்ப்பட்டியல்களும் வெளியிடப்பட்டுள்ளன. (லோ)

## அரச திணைக்கள சேத விபரம் திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அரச திணைக்களங்கள், கட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் சொத்துக்களுக்கு இது வரை ஏற்பட்ட சேத விபரங்களை திரட்டும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. எனினும் சிதைவடைந்த அரச கட்டடங்களை திருத்தி அமைப்பதற்கான முயற்சிகள் எதுவும் தற்போதைக்கு மேற்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

## எரிபொருளில் கலப்படம்

எரிபொருளில் கலப்படம் செய்து விற்பனை செய்த குடும்பஸ்தர் ஒருவர் விடுதலைப்புலிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி என்பவர் எரிபொருள்களில் கலப்படம் செய்து விற்பதாகக் கிடைத்த தகவலின் பேரில் மானிப்பாய் பிரதேச விடுதலைப்புலிகள் எரிபொருள்களைக் கைப்பற்றியதுடன் விற்பனையாளரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (செ.த. மை)

## இருவர் காயம்

முத்தையன்கட்டில் வீடொன்றில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியை நாய் இடறி வெடித்ததால் ஜெயசீலன் (வயது16) என்பவர் தலையிலும், முத்துச் செல்வம் (வயது 31) என்பவர் காலிலும் காயமடைந்தனர். (85)

## முல்லையிலும் மோதல், ஷெல்தாக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் அதிகாலை நாலுமணியளவில்ஷெல்தாக்குதல், விமானத் தாக்குதல்களுடன் இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறினர். புலிகளின் எதிர்த்தாக்குதலைத் தாங்கிக் கொள்ள முடியாத இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமுக்குத் திரும்பினர். பின்னர் இராணுவத்தினர் முகாமிலிருந்து பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (85)

## "போர்க்கால ராகங்கள்"

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தினரின் போர்க்கால ராகங்கள் என்னும் இசைநிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் தமிழீழத்தின் பிரபல பாடகரான "இந்தமண் எங்களின் சொந்த மண்" புகழ் சாந்தலிங்கமும் மற்றும் பாடகர்களும் பாடுவார்கள்என மேற்படி மன்றத்தின் தலைவர் அ. அமிர்தராஜ் தெரிவித்துள்ளார்.

# தொண்டர் ஆசிரியர் தெரிவு தடைப்பட எம். பி. மார் தலையீடே காரணம்

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கையில் இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் செல்வாக்கும் அதிகாரிகளின் ஊழலுமே அண்மையில் தொண்டராசிரியர் நேர்முகப் பரீட்சையின் தடைப்பாடு ஆகும் என யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி தெரிவித்தார்.

தென்பகுதியில் தொண்டர் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்ட போது சில தென்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது செல்வாக்கை பயன்படுத்தி தமது சொந்தக்காரர்களையும் தேர்தல் காலங்களில் பந்தம் பிடித்தவர்களையும் சிபாரிசு செய்துள்ளனர் என தொடர்ச்சியாக கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் வந்ததை தொடர்ந்தே நிறுத்தி வைத்துள்ளதாக அவர் விளக்கினார்.

இதே வேளை நேர்முகப் பரீட்சை இடை நிறுத்தம் பற்றி கல்விச் சேவைகள் ஆணைக்குழு அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கல்விச் சேவைகள் ஆணைக்குழு பல வருட சேவை செய்த தொண்டர் ஆசிரியர்கள் பற்றி கவலை கொண்டுள்ளதாகவும் போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப் பட்டால் சேவை ஆசிரியர்கள் பலர் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளை பெறாத இடத்து அவர்களுடைய பலவருட சேவையில் பலனின்றி போய் விடும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு கருத்துக்கொண்டுள்ளது.

அப்படியிருந்தும் கல்வி அமைச்சு தற்போது போட்டிப் பரீட்சை அடிப்படையிலேயே ஆசிரியர் தெரிவு செய்யப்பட வேண்டும் என தீர்மானம் எடுத்துள்ளது என்று அவர் கூறினார். (லோ)

## கலைஞர்களுடன் கலந்துரையாடல்

(நமது நிருபர்)

தமிழீழத்தின் கலைஞர்களின் எதிர்காலத் திட்டமொன்றை வகுக்கவும், போராட்டத்துடன் இணைந்து பங்களிப்புச் செய்யவும் தமிழீழக் கலைஞர்கள் அனைவருக்கும் நிதர்சனம் ஒளிபரப்பு சேவையும், விடுதலைப்புலிகள் கலை கலாசாரப் பிரிவும் அழைப்பு விடுத்துள்ளது. இதற்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் பங்குகொண்டு தத்தம் மேலான கருத்துரைகளை முன்வைக்குமாறு கலைஞர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் கலை கலாசார பிரிவினரும், நிதர்சனம் ஒளிபரப்பு சேவையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்

## லெப். கிறிஸ்ரியின் நினைவு தினம்

(வண்ணார்பண்ணை)

லெப்டினன்ட் கிறிஸ்ரியின் 4 ஆவது சிரார்த்த தினத்தை ஒட்டி இன்று (29-12-90) மாலை 6மணிக்கு வண்ணார்பண்ணை தட்டாதெருச் சந்தியில் அவரது திருவுருவப் படத்தை இப்பகுதியைச் சேர்ந்த மறைந்த போராளியின் மாமியின் தாயார் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

லெப்டினன்ட் கேணல் ராதாவின் தந்தையார் மு.சி. கனகசபாபதி அவர்களின் தலைமையில் நினைவுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர் (44)

# ஆபிரிக்க நாடுகளில் பெரும் பஞ்சம் ஏற்படலாம்

(வாஷிங்டன்)

ஆபிரிக்க நாடுகளில் வளர்ச்சியின்மையினாலும், உள்நாட்டுக் கலவரங்களினாலும் என்றுமில்லாதவாறு மிக மோசமான பட்டினிச் சாவு ஏற்படலாம் என ஐ. நா. சபையின் உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்தத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் இந்த நாடுகளுக்கு உதவ வேண்டும் எனவும், ஆபிரிக்க நாடுகளில் சூடான், எத்தியோப்பியா, அங்கோலா, லைபீரியா மற்றும் மொசாம்பிக் நாடுகளே பெரிதும் பாதிப்படைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சூடானுக்குப் பத்து லட்சம் தொன் உணவுப் பொருள்களும், எத்தியோப்பியாவிற்கு 98 கோடி 50 லட்சம் தொன் உணவுப் பொருள்களும், அங்கோலாவிற்கு 11,000 கோடி தொன் உணவுப் பொருள்களும் உடனடியாகத் தேவைப்படுகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேனீர் சாலை

யாழ் போதனா மருத்துவ மனையில் எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் கன்ரீன் செயற்பட உள்ளது. இவ்வாறு போதனா மருத்துவமனை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க 85)

# பாண்டிச்சேரியில் அரசமைக்க இந்திராகாங்கிரஸுக்கு அழைப்பு

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியை துணைநிலை ஆளுநர் ஹர்வருப்சிங் அழைத்துள்ளார்.

இங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டு நிர்வாகம் குலைந்திருப்பதால் இடைக்கால அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு செயல்பட தாம் விரும்பவில்லை என்பதால் இந்திரா காங்கிரசை அரசாங்கம் ஒன்றை அமைக்க அழைத்திருப்பதாக துணைநிலை ஆளுநர் தெரிவித்தசர்.

இதற்கு முன்னதாக புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும்வரை டி. ராமச்சந்திரனை ஆட்சியை நடத்துமாறு துணைநிலை ஆளுநர் கேட்டிருந்தார்.

இதற்கிடையில் புதிய அரசாங்கம் ஒன்று அமைப்பது குறித்து இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியுடன் ஆலோசனை நடத்த பாண்டிச்சேரி இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவர் புதுடில்லி சென்றுள்ளார்.

**வடமராட்சியில்**

...ரம் (62). எஸ். உருத்திரகுமார் (36, எஸ் மலர்விழி (28). விஜயா (20) துரைராஜா (44) வசந்தி ஆகியோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

மேலும் சுமார் பதினைந்து வீடுகளும், சுமார் பத்து படகுகளும், சில பலசரக்குகடைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. வெடிக்காத நிலையிலிருந்த ஒரு குண்டை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துள்ளனர். (35)

**போரின்**

சிறிலங்காவின் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

மேலும் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய ரஞ்சன் விஜேரத்தினா வடக்கில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் தமது இராணுவத்தினர் பெறும் வெற்றியை ஒட்டியே...

**காலவரையற்ற**

...மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பு சிறிலங்கா அரசிடம் விடப்பட்டிருக்கிறது. சிறிலங்கா அரசு உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட நாம் அவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறோம். எமது போர்நிறுத்தப் பிரகடனத்தை ஏற்று சிறிலங்கா அரசு யுத்த நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் விடு...

**நூறு பொலிசார்**

யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுமார் 150பேர் உள்ளனர். இவர்கள் கடந்த பல மாதங்களாகக் கடமை எதுவும் செய்யாமலே இருந்துவருகின்றனர். இவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தற்போது ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துள்ளனர். ஒரு சிலர் மட்டும் அரசின் அறிவித்தலைத் தொடர்ந்து வெளி மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். (க)

**பத்துத் தமிழ்**

...பல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் வயோதிபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அகதிமுகாம்களில் பசியால் வாடும் மக்களுக்கு வழங்கவென வைத்திருந்த உணவுப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன இத்தனைக்கும் இராணுவத்தினருக்கு துரோக கும்பல்கள் ஒத்துழைப்பு நல்கி உள்ளன.

இந்த இராணுவ நடவடிக்கைகளின் உச்ச நிகழ்வாக கடந்த 21 ஆம் திகதி பகல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 40 ஆம் கட்டை கிராமத்தை ரெலோவினரும் புளொட்டினரும் சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து சுற்றிவளைத்தனர்.

வடிவேல் வயது 65 ஆகிய இரண்டு வயோதிபர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். இதேபோல் மூன்று தினங்கள் கழித்து திருப்பழுகாமம்பகுதிக்குள் புகுந்த இராணுவத்தினர் அறுபது வயதான இளையதம்பி தம்பிராசா என்ற வயோதிபரை கைது செய்து பொதுமக்கள் முன்னிலையில் கத்திகளால் வெட்டியபின் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொன்றனர்,

இந்த வயோதிபர்கள் தமது இளைய உறவினர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி விட்டு வீட்டின் பாதுகாப்புக்கருதி அங்கு தங்கியிருந்தவர்களேயாவர்.

இராணுவம் சங்கத்தைச் சூறையாடியது

**பிரேத**

இந்தச்சம்பவம் நேற்றுமுன் தினம் (27ஆம் திகதி) ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி என்னும் இடத்தில் நடைபெற்றது.

மணற்பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரின் சடலம் திறந்தவெளி ஊடாகக் கொண்டுசெல்லப்பட்டது. அப்பொழுது பலாலியிலிருந்து கிழக்குப் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹெலிகொப்டர்ஒன்று ஊர்வலத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டது. ஊர்வலத்தினர் நாலா பக்கமும் சிதறியோடிப் பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் காயம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். பின்னர் பாடையின் மேல் கட்டப்பட்டிருந்த மேலாப்புத்துணியை எடுத்து உயரக் கொடிபிடித்துக் கொண்டு சென்று பிரேதத்தை தகனம் செய்தனர்.

**பூந்தோட்டத்தில்**

பகுதியைச் சுற்றி வளைத்து நிற்கும் புலிகள் மீது இராணுவத்தினர். துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனை அடுத்தே இராணுவத்தினர் மீதான தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மோதலின் போது அரச படையினரின் ஷெல் தாக்குதலினாலும், துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் பொதுமக்களில் சிலர் காயமடைந்துள்ளனர். நா. தனிநாயகம் (வன்னேரிகுளம்), ப. தனபாலசிங்கம் (தெற்கிலுப்பைக்குளம்) ஆகியோருடன் மேலும் சிலர் காயமடைந்தனர் (தி)

**பத்திரிகை**

...விடயத்தை கொண்டுவந்து பேசும் போது கூறினார்கள்.

தற்போது நடைபெற்று வரும் உணவு விநியோகத்தை பத்திரிகைகள் கூறும் திகதியில்...

மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்த கலந் துரையாடலில் பங்குகொண்டு தத்தம் மேலான கருத்துரை களை முன்வைக்குமாறு கலை ஞர்கள் அனைவரையும் விடு தலைப் புலிகள் கலை கலா சார பிரிவினரும், நிதர்சனம் ஒளிபரப்பு சேவையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### வடமராட்சியில்

கரம் (62). எஸ். உருத் திரகுமார் (36, எஸ் மலர் விழி (28). விஜயா (20) துரை ராஜா (44) வசந்தி ஆகியோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

மேலும் சுமார் பதினைந்து வீடுகளும், சுமார் பத்து பட குகளும், சில பலசரக்குக் கடை களும் சேதமாக்கப்பட்டுள் ளன. வெடிக்காத நிலையி லிருந்த ஒரு குண்டை விடு தலைப் புலிகள் மீட்டெடுத் துள்ளனர். (35)

### போரின்

சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

மேலும் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் புதிய ரஞ்சன் விஜேரத்தினா வடக்கில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங் களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரின் தமது இராணுவத்தினர் பெறும் வெற்றியை ஒட்டியே சமாதானம் பற்றிக் கூறமுடி யும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இன்னும் சில மாதங்களுக்கு தமிழீழ விடு தலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று குறிப்பிட்ட ரஞ்சன் விஜேரத்தினா அதே வேளை ஏனைய தமிழ் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் தெரி வித்தார்.

### ராணுவத்தினர்

பொலிஸ்காரர் ஆவார் இவர்களிடம் இருந்து 49,000 ரூபாவும் விடுதலைப்புலிக ளால் கைப்பற்றப்பட்டிருக் கின்றது இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்க ளின் விபரம்வருமாறு:

- ★ ரி. 81 - 1
- ★ மகசீன் - 2
- ★ ரி 56 – II - 2
- ★ ரி 56 சொஜிட்பட் - 1
- ★ மகசீன் - 12
- ★ ஐ எம் ரவை - 233
- ★ ஜே.ஆர்.கைக்குண்டு - 3
- ★ ஏ.கே. கோல்சர் - 3

இதேவேளை பலியான படையினர் தெருவையே சுத்த மாக்கினர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

போட்டிப் பரீட்சை அடிப்ப

## லெப்.கிறிஸ்ரியின் நினைவு தினம்

(வண்ணார்பண்ணை)

லெப்டினன்ட் கிறிஸ்ரியின் 4 ஆவது சிராத்த தினத்தை ஒட்டி இன்று(29-12-90)மாலை 6மணிக்கு வண்ணார்பண்ணை தட்டாதெருச் சந்தியில் அவ ரது திருவுருவப் படத்தை இப்பகுதியைச் சேர்ந்த மறை ந்த போராளியான மாபியின் தாயார் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

லெப்டினன்ட் கேணல் ராதாவின் தந்தையார் மு.சி. கனகசபாபதி அவர்களின் தலைமையில் நினைவுக் கூட் டமும் நடைபெறவுள்ளது இதில் தமிழீழ விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர் (44)

### காலவரையற்ற

மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பு சிறிலங்கா அர சிடம் விடப்பட்டிருக்கிறது. சிறிலங்கா அரசு உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உல கிற்கு எடுத்துக்காட்ட நாம் அவர்களுக்கு ஒரு அரிய சந் தர்ப்பத்தை அளிக்கிறோம். எமது போர்நிறுத்தப் பிரகட னத்தை ஏற்று சிறிலங்காஅரசு யுத்த நடவடிக்கைகளை நிறுத் திக்கொள்ளுமாயின் சமா தானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் விடு தலைப்புலிகள் இயக்கம் தயா ராக இருக்கிறது

யுத்தம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தமிழ் மக் களுக்கு எதிராக ஒரு இனப்படு கொலையை நடத்தி வரு கிறது. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் அகதி முகாம் களிலும் காடுகளிலும் அவலப் பட்டுவரும் பல்லாயிரக்கணக் கான மக்களுக்கு நிவாரண உதவிகளைத் தடுத்து வைத் திருக்கிறது. போரைச் சாக் காக வைத்து அரச சார்பற்ற உதவி நிறுவனங்களின் பிரதி நிதிகள் இந்தப் பகுதிகளுக்குச் செல்லத் தடைவிதித்திருக் கிறது. உலகத்திற்குத் தெரி யாமல், மௌனமாக, தினமும் செத்துமடியும் இந்த மக்களின் அவல நிலையை உலகிற்கு எடுத்துக்காட்டவும் அவர் களுக்கு உதவும் நோக்கமா கவே நாம் போர்நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள் ளோம்.

ஒருதலைப்பட்சமாக நாம் பிரகடனம் செய்யும் போர் நிறுத்த அறிவித்தலைச் சிறி லங்கா அரசு கவனமாகப் பரி சிலனைசெய்து உகந்தமுடிவை எடுக்குமென நம்புகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது

சியை துணைநிலை ஆளுநர் ஹர்வருப்சிங் அழைத்துள் ளார்.

### நூறு பொலிசார்

யாழ் மாவட்டத்தில் சிறி லங்கா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுமார் 150பேர் உள்ள னர். இவர்கள் கடந்த பல மாதங்களாகக் கடமை எது வும் செய்யாமலே இருந்துவரு கின்றனர். இவர்களில் நூற் றுக்கும் மேற்பட்டவர்கள் தற் போது ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்து ளனர். ஒரு சிலர் மட்டும் அரசின் அறிவித் தலைத் தொடர்ந்து வெளி மாவட்டங்களுக்குச் சென்றுள் ளனர். (க)

### பத்துத் தமிழ்

யல் வன்முறைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர். குழந்தைகள் வயோதிபர்கள் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர். அகதிமுகா ம்களில் பசியால் வாடும் மக் களுக்கு வழங்கவென வைத் திருந்த உணவுப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன இத் தனைக்கும் இராணுவத்தின ருக்கு துரோக கும்பல்கள் ஒத்துழைப்பு நல்கி உள்ளன.

இந்த இராணுவ நடவடிக், கைகளின் உச்ச நிகழ்வாக கடந்த 21 ஆம் திகதி பகல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 40 ஆம் கட்டை கிரா மத்தை ரெலோவினரும் புளட்டினரும் சிங்கள இரா ணுவத்தினருடன் சேர்ந்து சுற்றிவளைத்தனர்.

ஆண்கள் இத்தகைய சுற்றி வளைப்புகளுக்கு பயந்து ஏற் கனவே பாதுகாப்புகளை தேடிக்கொள்வதால் அக்கிரா மத்திலிருந்த ஒன்றுமறியாத பெண்கள், குழந்தைகளை சுற்றிவளைத்து தமது அடா வடித்தனங்களை காட்டினர். இந்த சுற்றிவளைப்பின் போது 12 வயது நிரம்பிய பாட சாலை மாணவிகள் உட்பட பத்து பெண்களை தமது பாலியல் வன்முறைக்கு உள் ளாக்கினர்.

இந்த 40ஆம் கட்டை கிராம மக்கள் அண்மையில்த் தான் இராணுவ அச்சுறுத்தல்கள் ஒய்ந்து விட்டதை கருத்தில் கொண்டு அங்கு மீளச்சென்று குடியிருந்தனர்.

இதே கிராமத்தில் 37 ஆம் கொலணியைச் சேர்ந்த இரா ணுவத்தினர்மேற்படி சம்பவம் நடைபெற்றதற்கு முதல் நாள் திக்கோடையைச் சேர்ந்த தாமோதரம் வைத்திலிங்கம் என்ற 45 வயது தமிழரை சுட்டுக் கொன்றனர்.

கடந்த 22 ஆம் திகதி அன்று பிற்பகல் 2 மணியளவில் மட் டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெல்லாவெளி என்ற கிராமத்திற்கு வந்த இராணு வத்தினர் முகாமுக்கு திரும்பும் வழியில் 35ஆம் கொலனி என்ற இடத்தில்லொ: துரைச் சாமி வயது85; பொன்னையா வடிவேல் வயது 65 ஆகிய இரண்டு வயோதிபர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். இதேபோல் மூன்று தினங்கள் கழித்து திருப்பழுகாமம்பகு திகளில் புகுந்த இராணுவத் தினர் அறுபது வயதான இளையதம்பி தம்பிராசா என்ற வயோதிபரை கைது செய்து பொதுமக்கள் முன்னி லையில் கத்திகளால் வெட் டியபின் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொன்றனர்,

இந்த வயோதிபர்கள் தமது இளைய உறவினர்களை பாது காப்பான இடங்களுக்கு அனுப்பி விட்டு வீட்டின் பாது காப்புக்கருதி அங்கு தங்கி யிருந்தவர்களேயாவர்.

### இராணுவம் சங்கத்தைச் சூறையாடியது

மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள மண்டூர் எனும் கிராம மக்களுக்கான நிவா ரண உணவாக வழங்குவதற் காக மண்டூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உண வுக் களஞ்சியத்தில் வைக்கப் பட்டிருந்த நூறு மூடை அரிசி யைத் தமது வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ள னர், இவர்கள் இந்த அரிசியை எடுத்துச் செல்லும்போது தம க்கு முகாமில் அரிசி மூடைகள் தேவை என்று கூறிச் சென் றுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சவளக்கடை என்ற அம் பாறை மாவட்டத்தில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த இரா ணுவத்தினரே இவ்வாறு நிவா ரணம் வழங்க வைக்கப்பட் டிருந்த உணவுப் பொருள் களைச் சூறையாடிச் சென் றோராவர் இந்த இராணுவ அணியினரே சொறிக்கல் முனை என்ற இடத்திலிருந்த அகதிகளைக் கற்பழித்தும், வெட்டியும் கொன்றவர்களா வர். இதனால் சவளக்கடை பகுதியில் உள்ள மக்களும், சொறிக்கல்முனைப் பகுதியில் உள்ள மக்களும் பாதுகாப்புக் கருதி மண்டூருக்குச் சென்று வாழக்கூடிய இடங்களில் வாழ் ந்து வந்தனர். இவர்கள் தமது நிவாரணப் பொருள்களை இப்போது இராணுவத்தின ரிடம் பறிகொடுத்துள்ளனர்.

செயல்பட நாம் விரும்ப வில்லை என்பதால் இந்திரா காங்கிரசை அரசாங்கம் ஒன்றை அமைக்க அழைத் திருப்பதாக துணை நிலை ஆளுநர் தெரிவித்தசர்.

இதற்கு முன்னதாக புதிய அரசாங்கம் ஒன்றை அமைக் கும்வரை டி. ராமச்சந்திரனை ஆட்சியைநடத்துமாறு துணை நிலை ஆளுநர் கேட்டிருந்தார்.

இதற்கிடையில் புதிய அர சாங்கம் ஒன்று அமைப்பது குறித்து இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியுடன் ஆலோசனை நடத்த பாண் டிச்சேரி இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவர் புதுடில்லி சென்றுள்ளார்.

கொண்டுசெல்லப்பட்டது. அப்பொழுது பலாலியிலிருந்து இழக்குப் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹெலி கொப்டர்ஒன்று ஊர்வலத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோ கம் மேற்கொண்டது. ஊர் வலத்தினர் நாலா பக்கமும் சிதறியோடிப் பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் காயம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். பின்னர் பாடை யின் மேல் கட்டப்பட்டிருந்த மேலாப்புத்துணியை எடுத்து உயரக் கொடிபிடித்துக் கொண்டு சென்று பிரேதத்தை தகனம் செய்தனர்.

### பூந்தோட்டத்தில்

பகுதியைச் சுற்றி வளைத்து நிற்கும் புலிகள் மீது இராணு வத்தினர். துப்பாக்கிப்பிர யோகம் செய்தனர். இதனை அடுத்தே இராணுவத்தினர் மீதான தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மோதலின் போது அரச படையினரின் ஷெல் தாக்குதலினாலும், துப்பாக் கிப் பிரயோகத்தினாலும் பொதுமக்களில் சிலர் காய மடைந்துள்ளனர். நா.தனி நாயகம் (வன்னேரிகு ளம்), ப.தனபாலசிங்கம் (தெற்கிலுப்பைக்குளம்) ஆகி யோருடன் மேலும் சிலர் காய மடைந்தனர் (தி)

### பத்திரிகை

விடயத்தை கொண்டுவந்து பேசும் போது கூறினார்கள்.

தற்போது நடைபெற்று வரும் உணவு விநியோகத்தை பத்திரிகைகள் கூறும் திகதியில் மேற்கொள்வதில் பல சிரமங் கள் உள்ளதாகவும் விநியோ கத்திற்கு வேண்டிய பொருள் கள் வந்து சேர்ந்தாலே தாம் உணவுவிநியோகத்தைஆரம்பி க்கலாம்என்றும்கூறப்பட்டது. இதனால்,பத்திரிகைகள் குறிப் பிடும் திகதியில் பொருள்களை விநியோகிக்கத் தவறும்பட்சத் தில் பொதுமக்கள் கூட்டுற வுச்சங்கங்கள் மீது நம்பிக்கை இழக்கின்றனர் என்றும் தெரி விக்கப்பட்டது. (க)

### இருபத்தொரு

பட்ட இருபத்தொரு தமிழர் கள் சிறிலங்காப் பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்ட னர் இவர்கள் அனைவரும் முஸ்லிம் ஊர்காவற்படையின ரால் பலமாகத் தாக்கப்பட் டுள்ளனர். கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்களை 20ஆம் திகதியன்று சிறிலங்காப் பொலிஸார் விடு வித்திருப்பதாகத் தெரிகின் றது.

### திருப்பழுகாமம்

கரத்தினம், மகாலிங்கம் ஆகி யோரின் வீடுகளைக் குண்டு வைத்து தகர்த்துள்ளனர். இதனால்எழுந்த பாரியஅதிர்ச் சியினால் அக்கிராமத்தைச் சேர்ந்த பெண்களும், குழந் தைகளும் உள உடல் ரீதியா கப் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக் கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.